/மிக மிக அவசரம்/

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்.0304/அ5/2018 நாள் 17.01.2018

===

பொருள் பள்ளிக் கல்வி – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் – நபார்டு பகுதி XVIII–க்கான கருத்துரு கோருதல் – சார்பு.

பார்வை சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந .க.எண்.93500/என்2/இ2/2017, நாள் 10.01.2018

===

பார்வையில் காணும் இயக்குநரின் செயல்முறைகளில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நபார்டு பகுதி XVIII திட்டம் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள கீழ்க்காணும் அறிவுரைகளை பின்பற்றி கருத்துரு அனுப்ப தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

<u>பகுதி – I</u>

கடந்த 3 ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு தேவையான வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிவறை, குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் **(RMSA திட்டத்தில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள் தவிர)**

<u>பகுதி – II</u>

பிற அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தேவையான வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிவறை, குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்.

மேற்கண்ட பள்ளிகளில் உள்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு பரிந்துரை செய்யும்போது கீழ்கண்ட அறிவுரைகளை பின்பற்றி சார்ந்த கருத்துரு அனுப்புதல் வேண்டும்.

1. தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் பரிந்துரை செய்யும்போது மாணவ/மாணவியர் எண்ணிக்கை 300–க்கு குறையாமல் இருக்கும் பள்ளிகளே பரிந்துரைக்கப்பட வேண்டும்.
2. இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் இதுவரை நபார்டு திட்டத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படாத பள்ளியாக

இருக்க வேண்டும். நபார்டு பகுதி – I, II, III, IV,V மற்றும் VI ஆகிய முதல் கட்ட பள்ளிகள் எனில் மட்டும் தேவை அவசியம் இருப்பின் கருதலாம்.

3. பள்ளிக்கு போதிய மாணவ / மாணவியர் எண்ணிக்கை இருக்க வேண்டும்.
4. பள்ளிக்கான கட்டிடம் கட்ட உரியதாக இடம் இருக்க வேண்டும்.
5. பள்ளியின் இடம் வில்லங்கம் அற்ற வகையிலும், முதன்மைக் கல்வி அலுவலரின் பெயரிலும் இருக்க வேண்டும்.
6. புதிய வகுப்பறைகள் அவசியமான அளவிற்கு மட்டும் கோரப்பட வேண்டும்.
7. மாவட்டத்தில் உள்ள பின் தங்கிய பகுதிகள் SC/ST பிரிவினர் அதிகம் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து பரிந்துரை செய்யப்பட வேண்டும்.
8. தற்போது பகுதி XVIII–க்கு திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் போது மொத்தம் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் ஏற்கனவே நபார்டு கடனுதவி திட்டத்தால் பகுதி XVII வரை பயன்பெறாத பள்ளிகள் கண்டறியப்பட்டு அப்பள்ளிகளுக்கு இடவசதி இருந்தால் மட்டுமே உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்த கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. இப்பணியினை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட வசதியும், தங்கள் பள்ளியில் உள்ள இடவசதிகளையும் ஆய்வு செய்து இத்திட்டத்தின் கீழ் கருத்துரு அனுப்புதல் வேண்டும். மேலும் RMSA திட்டம் மூலம் கட்டுமான பணி மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு, அத்தொகையை விடுவிக்கப்படும் நிலையில் அப்பள்ளியின் பெயரை நபார்டு திட்டத்தின் கீழ் எக்காரணத்தை கொண்டும் கருத்துரு அனுப்பக் கூடாது. ஒவ்வொரு பள்ளிக்கும் தேவையான வகுப்பறைகள், நிர்வாக அறைகள், ஆய்வகம், குடிநீர், கழிவறைகள் மற்றும்

சுற்றுச் சுவர் போன்ற வசதிகள் கண்டறிவதற்கு பள்ளி வாரியாக இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தில் அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து 25.01.2018–க்குள் அனுப்பப்பட வேண்டும்.

10. பள்ளியின் இடம் சார்பான பள்ளி அமைவிடம் மற்றும் புதிய கட்டடம் கட்ட தெரிவு செய்யப்பட்ட இடம் சார்பான புகைப்பட நகலை தேர்ந்த புகைப்பட கலைஞர் மூலம் எடுத்து அதன் Soft Copies மற்றும் Hard Copies நகலை அனுப்பப்பட வேண்டும்.

மேலும் பள்ளிகளை தேர்வு செய்து அரசுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக கணினியில் தட்டச்சு செய்து படிவம் மற்றும் கருத்துரு 4 நல்களில் இவ்வலுவலகத்திற்கு தனிநபர் மூலம் "அ5" பிரிவில் 25.01.2018–க்குள் ஒப்படைக்குமாறு (Hard Copy & Soft Copy) தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **இதில் காலதாமதம் ஏற்படின் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.**

இணைப்பு:
படிவம் ஆங்கிலம் மற்றும்தமிழ்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்.

நகல் :
1. மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர் / திருப்பத்தூர்
2. சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.